


**06. 03. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வேளாண்மை திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. உயிரி எரிபொருள் உற்பத்திக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் நாடு தற்சார்பு நிலையை எட்டும் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

3. தமிழக கிராமப்புறங்களில் வரும் 2030-ம் ஆண்டிற்குள் 5 லட்சம் வீடுகள் கட்டப்படும் என்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவை உறுப்பினர் பதவியிடங்களுக்கு தாக்கல் செய்யப்பட்ட 6 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

5. ஆல் இங்கிலான்ட் ஓபன் பேட்மிட்டன் போட்டி காலிறுதியில் இந்தியாவின் லக்ஷயா சென் - சீனாவின் Li Shi Feng ஐ இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வேளாண்மை திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

வேளாண் மற்றும் ஊரக மேம்பாடு என்ற தலைப்பில் பட்ஜெட்டுக்கு பிந்தைய கருத்தரங்கில் காணொலி வாயிலாக இன்று உரையாற்றிய அவர், நாட்டின் நீண்டகால வளர்ச்சிப்பாதையின் இன்றியமையா தூணாகவும் விவசாயம் திகழ்கிறது என்றார்.

வேளாண் பிரிவை வலுப்படுத்த அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

முந்திரி, தென்னை, சந்தன கட்டைகள், பாதாம், வால்நட், அகில்மரம் போன்ற வாசனை மரங்களை பயன்படுத்தி உயர் வேளாண்மை திறனை முன்னெடுத்துச் செல்வதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

நிதின் கட்கரி

எரிசக்தி பிரிவில் தற்சார்பு நிலையை எட்ட அதுசார்ந்த இறக்குமதியை குறைத்து உயிரி எரிபொருள் பயன்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய சாலைப் போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புனேயில் உயிரி எரிபொருள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர், நாட்டின் வருடாந்திர எரிபொருள் இறக்குமதி 16 லட்சம் கோடிக்கும் அதிகமாக உள்ளதாகவும்,

அழுத்தமூட்டப்பட்ட உள்நாட்டு எரிவாயு உற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம் இச்செலவு வெகுவாக குறையும் என்றும் குறிப்பிட்டார்.

வேளாண் கழிவுகளை, குறிப்பாக பயிர் சார்ந்த கழிவுகளை உயிரி எரிபொருளாக மாற்றி காற்று மாசுவை குறைக்க அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

வேளாண் குப்பையிலிருந்து மதிப்புமிகு பொருட்களை உருவாக்க உயிரி எரிபொருள் வழிகோலுவதாகவும், பொது போக்குவரத்துகளிலும் இதன் பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

உயிரி எரிபொருள் உற்பத்திக்கு நவீன தொழில் நுட்பங்களை தொழில்முனைவோர் கண்டறிய வேண்டும் என்றும், இதுசார்ந்த திட்டங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளில் முதலீடுகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

கீர்த்தி வர்தன் சிங்

தென்னாடுகளின் வளர்ச்சிக்கு நிலையான கடல்சார் மேம்பாடு தேவை என்று மத்திய வெளியுறவுத் துறை செயலர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ரெய்சீனா பேச்சுவார்த்தைகளின் 2-வது நாளான இன்று தேசிய நலன்களை முன்னிறுத்தியே இந்தியாவின் முடிவுகள் அமைவதாக குறிப்பிட்டார்.

கடல்சார் போக்குவரத்திற்கான சுதந்திரத்தை இந்தியா மதிப்பதாகவும், அதே வேளையில் இந்தோ பசிபிக்

பிராந்தியத்தில் தன்னிச்சையான மாற்றங்களை எதிர்ப்பதாகவும் கூறினார்.

உக்ரைன் மற்றும் மேற்காசிய பகுதிகளில் தூதரக நடவடிக்கைகளும், பேச்சுவார்த்தைகளும் அவசியம் என்று எடுத்துரைத்த அவர், இந்தியா - மத்திய கிழக்கு, - ஐரோப்பிய பொருளாதார வழித்தடத்தில் நிலைத்தன்மை முன்னெடுத்து செல்வதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அமெரிக்காவுடன் தடையற்ற, வெளிப்படையான, உள்ளடக்கிய ஒத்துழைப்பு மிகு இந்திய பசிபிக் பிராந்தியத்தை நம்நாடு விரும்புவதாகவும், ஐரோப்பா உடன் நடைமுறைகளுக்கு உகந்த ஜனநாயக மதிப்பீடுகளுடன் கூடிய ஒத்துழைப்பை நாடுவதாகவும் எடுத்துரைத்தார்.

பிரிக்ஸ் தலைமைத்துவத்தை இந்தியா ஏற்கவுள்ள நிலையில், வலுவான மீட்சி, புதிய கண்டுபிடிப்புகள், ஒத்துழைப்பு, ஸ்திரத்தன்மையை நோக்கமாக கொண்டு செயலாற்ற உள்ளதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

சுகோய் 30 M K I

அஸாம் மாநிலம் கர்பி அங்லாங் மாவட்டத்தின் எக்கோபி மலையில் சுகோய் 30 ரக போர் விமானம் நேற்றிரவு விபத்திற்குள்ளானதில் உயிரிழந்த இரண்டு விமானிகளின் மறைவிற்கு பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இவ்வீரர்களின் சேவை என்றென்றும் நினைவுக் கூறப்படும் என்றும், உயிரிழந்தோரின் குடும்பத்தினருடன் தேசம் துணை நிற்பதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மாநிலங்களவை

நாடுமுழுவதும் 10 மாநிலங்களின், 37 மாநிலங்களவை உறுப்பினர் பதவியிடங்களுக்கு வரும் 16-ம் தேதி நடைபெறும் தேர்தலுக்கு தமிழகத்திலிருந்து தாக்கல் செய்யப்பட்ட 6 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதையடுத்து இந்த 6 பேரும் போட்டியின்றி தேர்வாவது உறுதியாகி உள்ளது.

தி.மு.க. சார்பில் திருச்சி சிவா,

திரு. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்,

காங்கிரஸ் கட்சியின் திரு. கிறிஸ்டோபர் திலக்,

தே.மு.தி.க.வின் திரு. எல்.கே. சுதீஷ்

அஇஅதிமுக சார்பில் டாக்டர் மு. தம்பிதுரை,

பா.ம.க-வின் டாக்டர் அன்புமணி ஆகியோரது வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் வரும் 2030-ம் ஆண்டிற்குள் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் கிராமப் புறங்களில் லட்சம் வீடுகள்

கட்டப்படும் என்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் கனவுகள் மெய்ப்படும் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய முதலமைச்சர், நகர்ப்புறத்தில் அடுத்த 4 ஆண்டுகளில் 2 லட்சம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்,

ஒவ்வொரு மாவட்டத்திலும் மனநல ஆலோசனை மையம் அமைக்கப்படும்,

மேற்கு கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் ஆயிரம் மழைநீர் சேகரிப்புகள் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்,

அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

நீதிபதி

சென்னை உயர்நீதி மன்றத்தின் 55-வது தலைமை நீதிபதியாக சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி இன்று பதவியேற்றார்.

சென்னை கிண்டியில் உள்ள மக்கள் மாளிகையில் ஆளுநர் திரு. ஆர்.என். அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழகம் முழுவதும் ஒருகோடியே 31 லட்சம் பேர், மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் மூலம் பயன்பெறுவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தென்காசியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தில் 18 ஆயிரம் மாணவிகள் பயன்பெற்றுள்ளதாக கூறினார்.

முன்னதாக இம்மாவட்டத்தில் 6 கோடியே 59 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 32 முடிவுற்ற திட்டப்பணிகளை துவக்கி வைத்ததோடு, 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 185 புதிய திட்டப்பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில் 7 ஆயிரத்து 127 பயனாளிகளுக்கு 44 அரை கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖

செல்வ பெருந்தகை

தமிழ்நாட்டில் வன்கொடுமையும், கலவரமும் எங்கே நடந்தாலும் அது கண்டிக்கத்தக்கது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வ பெருந்தகை கூறியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இனிவரும் காலங்களில் இத்தகைய நிகழ்வுகள் நடைபெறாமல் இருக்க தமிழக அரசிடம் கோரிக்கை வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வரும் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடும் தொகுதிகள், தேர்தலை எதிர்கொள்வதற்கான பயணங்கள் போன்றவை குறித்து ஆராயப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், காங்கிரஸ் கட்சி சார்ந்த முடிவெடுப்பது அகில இந்திய தலைமையே என்றும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

மக்கள் தொகை கணக்கெடுப்பு

தமிழ்நாட்டில் முதற்கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் வரும் ஜூலை 17-ம் தேதி தொடங்கவுள்ளதாக அரசாணை வெளியிடப் பட்டுள்ளது.

ஆகஸ்ட் 30-ம் தேதிவரை 45 நாட்கள் நடைபெறும் இந்த கணக்கெடுப்பில் வீட்டின் நிலை, சொத்துக்கள் உள்ளிட்ட 33 கேள்விகள் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கப்பல்

நாகை - இலங்கை காங்கேசன் துறை இடையிலான கப்பல் போக்குவரத்து மீண்டும் இன்று தொடங்கியது.

77 பயணிகளுடன் இந்த கப்பல் நாகையிலிருந்து புறப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

தூத்துக்குடி வாய்ஸ்

மத்திய அரசின் சூரிய மின் திட்டத்தின் கீழ் வீடுகளில் சூரிய ஒளி மின் தகடுகளை அமைப்பதால் ஏராளமான நன்மைகள் கிடைப்பதாக தூத்துக்குடி மாவட்ட கட்டட பொறியாளர் திரு.அசோக் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

சனிப்பெயர்ச்சி

காரைக்கால் திருநள்ளாறு அருள்மிகு தர்பாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோவிலில் சனிப்பெயர்ச்சி விழா இன்றுகாலை நடைபெற்றது.

நளதீர்த்தத்தில் ஏராளமான பக்தர்கள் புனித நீராடி சுவாமி தரிசனம் செய்து பரிகார பூஜைகளை மேற்கொண்டனர்.

தேனி குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோவில்,

வேலூர் ஜலகண்டேஸ்வரர் ஆலயம்,

கும்பகோணம் திருநரையூர் ராமநாத சுவாமி திருக்கோவில்,

விழுப்புரம் கோலியனூர் வாலீஸ்வரர் உள்ளிட்ட திருக்கோவில்களில் சனிப்பெயர்ச்சி விழா பக்தி சிரத்தையுடன் நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖

திருவாரூர் வாய்ஸ்

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில் பங்குனி உத்திர பெருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

பெர்மிங்ஹாமில் நடைபெறும் ஆல் இங்கிலாந்து ஓப்பன் பேட்மிட்டன் போட்டி காலிறுதியில் இந்தியாவின் லக்ஷயா சென் - சீனாவின் Li Shi Feng ஐ இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.சி.சி உலக கோப்பை 20-20 கிரிக்கெட் இறுதி போட்டியில் அஹமதாபாத்தில் இந்தியா - நியூசிலாந்தை நாளை மறுநாள் எதிர்கொள்கிறது

மும்பையில் நேற்று நடைபெற்ற அரையிறுதியில் இங்கிலாந்தை 7 ரன் வித்தியாசத்தில் தோற்கடித்து இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖